IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.116/2016
DEPOSITION OF WITNESS

பி.வா.சா.1 சாட்சி சத்ய ஸ்ரீதர்   த.பெ.பாலசுந்தரம்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif on 10.06.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு  விசாரணை தொடர்சி :

1. எனது மனைவி கிரையம் வாங்கிய இடத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.283/9B ஆகும். சர்வே எண்.283/9A மற்றும் 283/9A1A என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி உட்பிரிவு செய்துதான் எனது மனைவிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு மீதமுள்ள இடம்தான் சர்வே எண்.  283/9A1A என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சர்வே எண்.  283/9A1A மற்றும் 283/1A க்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2.  தாவா இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சர்வேயர் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் சர்வேயர் அளக்காமல் தவறான வரைபடம் தாக்கல் செய்துள்ளார். சர்வேயர் வரைபடத்திற்கு நான் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் மனைவி வாங்கிய இடத்தை அளந்துதான் பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

3. சர்வே எண். 283/9A1A மற்றும் 283/1A ல் எனக்கோ, எனது மனைவிக்கோ எந்தவித பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். வழக்கில் கண்ட சொத்தில் காம்பவுண்ட் சுவர் நான் எழுப்பி ஆக்கிரமித்ததால்தான் அசல் வழக்கு என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிக்குதான் பாத்தியப்பட்டது என்றும் அதனை ஆக்கிரமிக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதால் வாதி வசம் ஒப்படைக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.06.10 09:54:08 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருமங்கலம்.